# அலகு 6 பொறுப்புகளைச் சரிபார்த்தல்

DYI85F

## கற்றலின் நோக்கங்கள்

- பல வகையான பொறுப்புகளை அறிந்துக் கொள்ளல்
- தணிக்கையாளரின் கடமைகளை தெளிவாக விவரித்தல் மற்றும் பல வகையான பொறுப்புகளை ஆழ்ந்த உணர்வோடு கவனித்து சரிபார்த்தல்

**நினைவு கூறல்** RECAP

சென்ற பாடத்தில் சொத்துகளின் பொருள், வகைகள், நிலைச் சொத்துக்கள், முதலீடுகள், நடப்புச் சொத்துகள், புலனாகச் சொத்துகள் ஆகியவற்றினை மதிப்பிடல் மற்றும் சரிபார்த்தல் நடைமுறைகளை அறிந்து கொண்டோம்.

## 6.1 அறிமுகம்

ஒரு வணிக அமைப்புகள் மூன்றாம் நபர்களுக்கு செலுத்த வேண்டிய சட்டப்படியான கடமைகள் பொறுப்புகள் ஆகும். முதல், கடனீட்டுப் பத்திரங்கள், நீண்ட கால கடன்கள், பற்பல கடனீந்தோர்கள், நிகழ்வடையாப் பொறுப்புகள் மற்றும் இதர பொறுப்புகள் ஆகியவைகள் பொறுப்புகளாகும். சொத்துகளை சரிபார்த்தல் போன்று பொறுப்புகளையும் சரிபார்த்தலும் முக்கியமானதாகும். பொறுப்புகளை சரியாக (அ) முறையாக சரிபார்த்தல் மற்றும் மதிப்பிடலும் செய்ய இயலாது, இருப்பினும் வியாபார அமைப்பின் நிதிநிலை அறிய இருப்புநிலைக்குறிப்பில் பொறுப்புகளை உண்மையாகவும், நேர்மையாகவும், வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது. பொறுப்புகளை சரிபார்க்க முக்கியமானது அனைத்து பொறுப்புகளும் சரியாக

**பொறுப்புகளைச் சரிபார்த்தல்**

- **முதல்**
  - ➢ கூட்டாண்மை அமைப்பு
  - ➢ நிறுமம்
    1. முதல்
    2. காப்பும் மிகுதியும்
- **கடனீட்டுப் பத்திரங்கள்**
- **நீண்ட கால கடன்கள்**
- **நடப்பு பொறுப்புகள்**
  1. பற்பல கடனீந்தோர்கள்
  2. செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு
  3. வங்கி மேல்வரை பற்று
  4. கொடுபட வேண்டிய செலவுகள்
- **நிகழ்வடையாப் பொறுப்புகள்**



Auditing_TAM_Chapter-06.indd 92 12/23/2019 1:39:14 PM

வெளிப்படுத்தப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு, வகுத்தளித்து இருப்பு நிலைக்குறிப்பில் வழங்கப்படும். மேலே கொடுக்கப்பட்ட விளக்கப்படம் பல்வேறு வகையான பொறுப்புகளை வகுத்தளித்து காட்டுகிறது.

## 6.2 முதல் சரிபார்த்தல்

ஒரு நிறுவனத்தில் அதன் உரிமையாளர் செய்த முதலீட்டைக் குறிப்பது முதல் ஆகும். உரிமையாளர் தனியாள் வாணிகர் அல்லது கூட்டாளி அல்லது பங்குதாரர்களாகவோ இருக்கலாம். இது ஒரு வியாபார அமைப்பின் அகப்பொறுப்புகள் என்பதால் இருப்புநிலைக் குறிப்பில் நேர்மையாகவும், சரியாகவும் உள்ளதா என்பதை தணிக்கையாளர் சரிப்பார்க்க வேண்டும்.

### 6.2.1 கூட்டாண்மை அமைப்பின் முதல் சரிபார்த்தல்

கூட்டாண்மை அமைப்பின் முதல் தொகை சரிபார்த்தலுக்கு தணிக்கையாளர் கீழ்க்கண்டவைகளை ஆய்வு செய்ய வேண்டும்.

1. **கூட்டாண்மை ஒப்பாவணம் சரிபார்த்தல்**

   ஒவ்வொரு கூட்டாளியும் தொழிலில் முதலீடு செய்துள்ள முதல் தொகை மற்றும் முதல் மீது வட்டி ஆகியவற்றை கண்டறிய கூட்டாண்மை ஒப்பாவணத்தை தணிக்கையாளர் சரிபார்க்க வேண்டும்.

2. **முதல் கணக்குகள் சரிபார்த்தல்**

   கூட்டாளிகளின் முதல் கணக்குகள் சம்பந்தமான அல்லது தொடர்புடைய நடவடிக்கைகளை தணிக்கையாளர் சரிபார்த்தல் வேண்டும்.

3. **கணக்கேடுகள் சரிபார்த்தல்**

   கூட்டாளிகளின் ரொக்க ஏடு, செல்லேடு அல்லது வங்கி அறிக்கை மற்றும் எடுப்புத் தொகைகளை தணிக்கையாளர் சரிபார்த்தல் வேண்டும்.

### 6.2.2 நிறுமத்தின் முதல் சரிபார்த்தல்

நிறுமத்தின் முதல் தொகை சரிபார்க்கும்பொழுது, பங்கு முதல், நிறுமம் நிர்வகிக்கும் காப்புகள் மற்றும் உபரிகளை தணிக்கையாளர் சரிபார்க்க வேண்டும்.




**பங்கு முதல் – பொருள்**

பங்குகளை வெளியிட்டு, அதன் மூலம் திரட்டும் முதல் தொகையே பங்கு முதல் எனப்படும். அதாவது பங்குகளை முகப்பு மதிப்பில் வெளியிட்டு அதன் மூலம் பெறப்படும் பங்குதாரர்களின் முதலீடு செய்யும் தொகையே பங்கு முதல் ஆகும்.

**பங்கு முதலின் உட்பிரிவுகள்**

1. *அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதல்*

   ஒரு நிறுமம் அதிகப்பட்சமாக திரட்ட அனுமதிக்கப்பட்டுள்ள தொகையை குறிப்பது அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆகும். இத்தொகை அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும். இதனை "பதிவு செய்யப்பட்ட முதல்" அல்லது "பெயரளவு முதல்" என்றும் அழைக்கலாம்.

2. **வெளியிட்ட பங்கு முதல்**

   பொதுமக்கள் வாங்குவதற்கு வெளியிடப்பட்ட அங்கீகரித்த பங்கு முதலில் ஒரு பகுதியை குறிப்பது வெளியிட்ட பங்கு முதல் ஆகும்.

3. **வெளியிடாத பங்கு முதல்**

   அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலுக்கும், வெளியிட்ட பங்கு முதலுக்கும்



Auditing_TAM_Chapter-06.indd 93 12/23/2019 1:39:15 PM

இடையேயான வேறுபாடு வெளியிடாத முதல் ஆகும்.

4. **ஒப்பிய பங்கு முதல்**

வெளியிட்ட பங்கு முதலில் பொதுமக்கள் வாங்குவதற்கு ஒப்புக் கொண்ட முதலை குறிப்பது ஒப்பிய பங்கு முதல் ஆகும்.

5. **ஒப்பாத பங்கு முதல்**

வெளியிட்ட பங்கு முதலுக்கும், ஒப்பிய பங்கு முதலுக்கும் இடையேயான வேறுபாட்டினை குறிப்பது ஒப்பாத பங்கு முதல் ஆகும்.

6. **அழைக்கப்பட்ட பங்கு முதல்**

ஒப்பிய பங்கு முதலின் மீது நிறுமத்தால் பணம் செலுத்த அழைத்த தொகையை அழைக்கப்பட்ட பங்கு முதல் என கூறலாம்.

7. **அழைக்கப்படாத பங்கு முதல்**

ஒப்பிய பங்கு முதலுக்கும், அழைக்கப்பட்ட பங்கு முதலுக்கும் இடையேயான வேறுபாட்டினை குறிப்பது அழைக்கப்படாத பங்கு முதல் ஆகும்.

8. **செலுத்தப்பட்ட பங்கு முதல்**

அழைக்கப்பட்ட பங்கு முதலில் பங்குநரால் உண்மையில் செலுத்தப்பட்ட தொகையை குறிப்பது செலுத்தப்பட்ட பங்கு முதல் ஆகும்.


9. **செலுத்தப்படாத பங்கு முதல் அல்லது அழைப்பு நிலுவை**

அழைக்கப்பட்ட பங்கு முதலில் சில பங்குதாரர்கள் அழைப்பு தொகையை செலுத்தாமல் இருக்கும் தொகையே செலுத்தப்படாத பங்கு முதல் ஆகும். இதனை "அழைப்பு நிலுவை" எனவும் கூறலாம்.

10. **காப்பு முதல்**

ஒரு நிறுமம் அதன் கலைப்பின்போது மட்டும் அழைப்பு விடுக்கலாம் என ஒதுக்கி வைத்துள்ள அழைக்கப்படாத பங்கு முதலின் ஒரு பகுதியை காப்பு முதல் ஆகும். இதற்காக ஒரு சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்படும். இதனை நிறுமத்தின் இருப்புநிலைக் குறிப்பில் வெளிப்படுத்தப்பட மாட்டாது.

**பங்கு முதலின் உட்பிரிவுகள்**






Auditing_TAM_Chapter-06.indd 94 12/23/2019 1:39:15 PM

**பங்கு முதல் சரிபார்த்தலில் தணிக்கையாளரின் கடமைகள்**

பங்கு முதல் சரிபார்த்தலில் தணிக்கையாளரின் கடமைகள் பின்வருமாறு.

1. **அமைப்பு முறையேடு மற்றும் உறுப்பினர்களின் பதிவேடு சரிபார்த்தல்**

   பங்கு முதல் சரிபார்ப்புக்கு, தணிக்கையாளர் முதன் முதலாக அமைப்பு முறையேடு, பங்குதாரர்களின் பெயர் பட்டியல், மற்றும் உறுப்பினர்களின் பதிவேடு ஆகியவற்றை சரிபார்க்க வேண்டும்.

2. **சான்றுச் சீட்டு பதிவுகள்**

   வங்கி அறிக்கை, ரொக்க ஏடு, இயக்குநர்களின் நிகழ்ச்சி குறிப்பு, வெளியிட்ட பங்குகளின் எண்ணிக்கை, வெளியிட்ட பங்குகளின் வகைகள் மற்றும் ஒவ்வொரு பங்குகள் மீது பெற்ற தொகை ஆகியவற்றை தணிக்கையாளர் சரிபார்க்க வேண்டும்.

3. **நிறுமச் சட்ட பிரிவுகளை காணுதல்**

   தணிக்கையாளர் தமது தணிக்கை பணியில் பங்கு முதலின் இருப்பு அதே நிலையில் உள்ளதா என்பதை உறுதி செய்திடல் வேண்டும். பங்கு முதல் மாறுபட்டு இருப்பின் நிறுமச் சட்ட விதிகளின்படி புதிய பங்கு முதல் வெளியீடு உள்ளனவா என்பதை சரிபார்க்க வேண்டும்.

4. **இருப்பு நிலைக் குறிப்பில் வெளிப்படுத்துதல்**

   "அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதல்" மற்றும் ஒவ்வொரு வகையான பங்குகளின் வெளியிட்ட பங்கு முதல், ஒப்பிய பங்கு முதல் ஆகியவை இருப்பு நிலைக் குறிப்பில் தனித்தனியாக காட்டப்பட்டுள்ளனவா என்பதை தணிக்கையாளர் உறுதிப்படுத்த வேண்டும்.

5. **பங்குதாரர்களின் உரிமைகள் சரிபார்த்தல்**

   நிறுமத்தின் செயல்முறை விதிகளில், ஒவ்வொரு பங்குகளின் உரிமைகள் குறிக்கப்பட்டுள்ளதா (அ) இணைக்கப்பட்டுள்ளதா என்பதை தணிக்கையாளர் சரிபார்க்க வேண்டும்.

6. **பங்குகளை முனைமத்தில் வெளியீடு செய்தல்**

   பங்குகளை முனைமத்தில் வெளியீடு செய்திருந்தால், அது இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பகுதியில் தனியாக காட்டப்பட்டுள்ளதா என சரிபார்க்க வேண்டும்.

7. **ரொக்கம் இல்லாமல் (அ) பெறாமல் பங்குகளை வெளியீடு செய்தலை ஆராய்தல்**

   ரொக்கம் இல்லாமல் பங்குகளை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால்,






Auditing_TAM_Chapter-06.indd 95 12/23/2019 1:39:16 PM

இயக்குநரவை நிகழ்ச்சி குறிப்பில் குறிப்பிட்டுள்ளபடி, விற்பனையாளரிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் உள்ளனவா என்பதை தணிக்கையாளர் சரிபார்க்க வேண்டும்.

8. **இந்திய மையவங்கி ஒப்புதலை சரிபார்த்தல்**

அயல் நாட்டினருக்கு பங்குகளை ஒதுக்கீடு செய்திருந்தால், இந்திய மையவங்கி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதா என்பதை தணிக்கையாளர் சரிபார்க்க வேண்டும்.

9. **பங்கு ஒறுப்பிழப்பு மற்றும் பங்குகளை மறு வெளியீடு செய்தல்**


நிறும செயல் முறை விதிகளில் பங்குகளை ஒறுப்பிழப்பு செய்யலாம் என அனுமதித்திருந்தால், பங்குகள் ஒறுப்பிழப்பு மற்றும் பங்குகளை மறுவெளியீடு செய்தல் சார்ந்த பதிவுகள் உள்ளனவா என்பதை தணிக்கையாளர் உறுதிபடுத்த வேண்டும்.

10. **முதலின இலாபத்தை மாற்றுதல்**

பங்குகளை ஒறுப்பிழப்பு செய்து, அதனை மறுவெளியீடு செய்வதால் ஏற்படும் முதலின இலாபத்தை "முதலின காப்பு" கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதா என தணிக்கையாளர் சரிபார்க்க வேண்டும்.

## 6.3 காப்புகள் மற்றும் உபரிகள் (மிகுதிகள்) சரிபார்த்தல்

காப்புகள் மற்றும் உபரிகள் என்பது நடப்பு இலாபத்திலிருந்து ஒதுக்கீடு செய்தல் அல்லது சேர்த்து வைத்த இலாபாங்களாகும். இதனை



Env: 013787 1/2 24/213111 13787

This Certificate is exempt from payment of stamp duty under proviso to Article 27 of Schedule I of the Indian Stamp Act, 1899

L&T Infra ISIN: INE691I07232

L&T INFRASTRUCTURE FINANCE COMPANY LIMITED
(incorporated under the Companies Act, 1956)
Registered Office: Mount Poonamallee Road, Manapakkam, Chennai - 600 089. Tel: +91 44 2252 6000; Fax: +91 44 2252 8688
Corporate Office: 3B, Laxmi Towers, C-25, 'G' Block, Bandra-Kurla Complex, Bandra (E), Mumbai - 400 051.
Tel: +91 22 4060 5300; Fax: +91 22 4060 5353

Debenture Certificate - Long Term Infrastructure Bonds 2011A Series

Public Issue by L&T Infrastructure Finance Company Limited (the "Company" or "Issuer") of Long Term Infrastructure Bonds with a face value of Rs. 1,000 each, in the nature of secured, redeemable, non-convertible debentures, having benefits under Section 80 CCF of the Income Tax Act, 1961 (the "Debentures" or the "Bonds"), aggregating up to Rs. 1,000 million with an option to retain an oversubscription of up to Rs. 3,000 million for allotment of additional debentures (the "Issue") made under the authority of the Memorandum and Articles of Association of the Company, Resolution passed by the Board of Directors of the Company at its Meeting held on January 14, 2011 and in terms of the Prospectus dated February 1, 2011 and Notification No. 48/2010/F.No.149/84/2010 - SO(TPL) dated July 9, 2010 issued by the Central Board of Direct Taxes.

THIS IS TO CERTIFY THAT THE PERSON(S) NAMED BELOW OR THE LAST TRANSFEREE(S) WHOSE NAME(S) IS/ARE DULY RECORDED IN THE MEMORANDUM OF TRANSFERS ON THE REVERSE HEREOF IS/ARE THE HOLDER(S) OF THE WITHIN MENTIONED DEBENTURE(S) SUBJECT TO THE MEMORANDUM AND ARTICLES OF ASSOCIATION OF THE COMPANY.

Long Term Infrastructure Bonds with a face value of Rs.1,000/- each, in the nature of Secured, Redeemable, Non-Convertible Debentures
Amount paid-up per Debenture Rs.1,000/-

Regd. Folio No. 11229522 Certificate No. 690014
Name(s) of the Holder(s) RAVISANKAR N

Series 2
No. of Debenture(s) EIGHT ONLY (****8****)
Distinctive Nos. 2538607-2538614

Date of Allotment : 23-03-2011

This Debenture Certificate is issued in terms of the Simple Mortgage Deed read with the Debenture Trust-cum-Hypothecation Deed (the "Trust Deed") entered into between the Company and Bank of Maharashtra (the "Trustee"). The Trustee will act as Trustee for the holders for the time being of the Debentures ("the Debenture holders") in accordance with the provisions of the Trust Deed. The Debenture holders are entitled to the benefit of and are bound by and are deemed to have notice of all the provisions of the Trust Deed. All rights and remedies of the Debenture holders against the Company in respect of, arising out of or incidental to the Debentures shall be exercisable by the Debenture holders only through the Trustee.

The Debentures are issued subject to and with the benefit of the Financial Covenants and Conditions endorsed hereon which shall be binding on the Company and the Debenture holders and all persons claiming by, through or under any of them and shall enure for the benefit of the Trustee and all persons claiming by, through or under them. The Company hereby agrees and undertakes to duly and punctually pay, observe and perform the Financial Covenants and Conditions endorsed hereon.

Given under the Common Seal of the Company this 23RD DAY OF MARCH, 2011
THESE DEBENTURES CANNOT BE SOLD/TRANSFERRED
TILL 22.03.2016 ["LOCK-IN-PERIOD"]

L&T INFRASTRUCTURE FINANCE COMPANY LIMITED ★ INCORPORATED IN TAMILNADU

Director

Director

Secretary / Authorised Signatory

Orient, Ph. : 4028 5888

Note : No transfer of any of the Debentures comprised in this Certificate will be registered unless accompanied by this Certificate.



Auditing_TAM_Chapter-06.indd 96 12/23/2019 1:39:17 PM

பங்காதாயம் வழங்குவதற்கு பயன்படுத்தக் கூடாது. ஆனால் எதிர்காலத்தில் எதிர்பார்க்கும் பொறுப்புகளுக்கும் எதிர்பாராத பொறுப்புகளுக்கும் ஈடு செய்வதற்கு தனியாக உருவாக்கப்படுகிறது.

### தணிக்கையாளரின் கடமைகள்

இலாபத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவது காப்புகள் மற்றும் உபரிகள் ஆகும். காப்புகள் மற்றும் உபரிகள் இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பக்கத்தில் காட்டப்பட்டிருக்கிறதா என்பதை தணிக்கையாளர் சரிபார்க்க வேண்டும். இலாப நட்ட ஒதுக்கீடு கணக்கின் பதிவுகளையும் சரிபார்க்க வேண்டும்.

## 6.4 கடனீட்டுப் பத்திரங்களை சரிபார்த்தல்

### 6.4.1 கடனீட்டுப் பத்திரங்கள் – பொருள்

கடனீட்டுப் பத்திரம் என்ற சொல் ஒரு நிறுமம் கடன் பத்திரங்களை வெளியிட்டு அதன் மூலம் நிதி பெருக்குவதே ஆகும். ஒரு கடனை ஒப்புக் கொள்ளும் அல்லது கடனை ஏற்படுத்தும் ஒரு ஆவணமே கடனீட்டுப் பத்திரம் ஆகும். அதில் பொதுவாக நிறுமத்தின் பொது முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும்.

### 6.4.2 கடனீட்டுப் பத்திரங்களின் வகைகள்

1. **பதிவு செய்யப்பட்ட கடனீட்டுப் பத்திரங்கள்**

   குறிப்பிட்ட நபர் அல்லது நபர்கள் பெயர்களில் வெளியிடப்பட்டு, கடனீட்டுப் பத்திரதாரர்கள் பெயர்கள், முகவரி நிறுமம் வைத்திருக்கும் கடனீட்டுப் பத்திர பதிவேட்டில் இடம் பெற்றிருப்பது பதிவு செய்யப்பட்ட கடனீட்டுப் பத்திரங்கள் ஆகும். இப்பத்திரங்களை பிறருக்கு மாற்றித்தர இயலும். வட்டியோ, கடனீட்டுப் பத்திரத் தொகையோ பதிவு செய்யப்பட்டுள்ள நபர்களுக்கே தரப்படும்.

2. **கொணர்பவர் கடனீட்டுப் பத்திரங்கள்**

   கடனீட்டுப் பத்திரத்தை யார் கொண்டு வருகிறாரோ அவருக்கு செலுத்தத் தக்க பத்திரங்கள் கொணர்பவர் பத்திரங்கள் ஆகும். அன்னாரின் பெயர், முகவரி, கடனீட்டுப் பத்திர பதிவேட்டில் இடம் பெறுவதில்லை. இவை வைத்திருப்போர் கடனீட்டுப் பத்திரங்கள் என சொல்லப்படுகின்றன. வட்டி பெறுவதற்கான சீட்டுகள் இப்பத்திரங்களுடன் இணைக்கப்பட்டிருக்கும். வட்டி செலுத்தற்குரிய நாளில், பத்திரத்தை வைத்திருக்கும் நபரிடமிருந்து, வட்டிக்கான சீட்டைப் பெற்றுக் கொண்டு வட்டித் தொகை செலுத்தப்படும். கொணர்பவர் கடனீட்டுப் பத்திரத்தை மாற்றுவதன் மூலம் பிறருக்கு மாற்றி தரலாம்.

3. **பிணைக் கடனீட்டுப் பத்திரங்கள் அல்லது அடமானக் கடனீட்டுப் பத்திரங்கள்**


   பிணைக் கடனீட்டுப் பத்திரதாரர்கள், ஒரு குறிப்பிட்ட நிலைச் சொத்துகளை ஈடாக அடமானம் செய்யப்பட்டிருப்பின், அது குறிப்பிட்ட பொறுப்பு எனப்படும். பொது சொத்துக்கள் மீது பொறுப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பின் அது மாறுபடும் பொறுப்பு எனப்படும். பிணைக் கடனீட்டுப் பத்திரங்களை “எதிராளி கடனீட்டுப் பத்திரம்” எனவும் அழைக்கப்படுகிறது. இவ்வகை கடனீட்டுப் பத்திரங்கள் வங்கிகள், நிதி நிறுவனங்களிடம் பெற்ற கடன் தொகைக்காக பாதுகாப்பு பொருட்டு வெளியிடப்படுகின்றன. நிறுமம் கடன் தொகை செலுத்த தவறினால், பிணையம் செய்யப்பட்ட சொத்துக்களை, பிணையக் கடனீட்டுப் பத்திரதாரர்கள் எடுத்துக் கொள்வர்.

4. **பிணையற்ற அல்லது வெற்றுக் கடனீட்டுப் பத்திரங்கள்**

   நிறுமம் தன் சொத்துக்களை ஈடாகக் காட்டாமல், அவற்றைப் பிணையாக ஏற்படுத்தாமல் மிக சிறந்த நல்ல நிலையில் உள்ள நிறுமங்கள் வெளியிடுவது பிணையற்ற அல்லது வெற்றுக் கடனீட்டுப்



Auditing_TAM_Chapter-06.indd 97 12/23/2019 1:39:17 PM




பத்திரங்கள் எனப்படும். பொதுவாக இது நடைமுறையில் இல்லை.

5. **மீள்தகு கடனீட்டுப் பத்திரங்கள்**

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குப் பின் அல்லது நிறுமம் விரும்பியபோது கடனீட்டுப் பத்திரங்களை நிறுமம் மீட்டுக் கொள்ளக் கூடியதாக இருப்பின், அவை மீள் தகு கடனீட்டுப் பத்திரங்கள் எனப்படுகின்றன.

மீள் தகு கடனீட்டுப்பத்திரங்கள் கீழ்க்கண்ட நிலையில் மீட்கப்படுகின்றன.

i. குறிப்பிட்ட காலம் முடிந்த பிறகு மீட்கப்படுகின்றன.

ii. கடனீட்டுப் பத்திரங்கள் வெளிச் சந்தையில் அன்றைய நாளைய விலையில் வாங்குவதன் மூலம் மீட்கப்படுகின்றது.

iii. ஆண்டு எடுப்புகள் மூலம் மீட்கப்படுகின்றது.

6. **மீள்தகா கடனீட்டுப் பத்திரங்கள்**

கடனீட்டுப் பத்திரங்களுக்குரிய பணத்தைப் பட்டுவாடா செய்து மீட்பதற்குக் காலக்கெடு எதுவும் குறிப்பிடாது வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களை மீள்தகா கடனீட்டுப் பத்திரங்கள் ஆகும். பொதுவாக இவ்வகை கடனீட்டுப் பத்திரங்களை நீண்ட காலத்திற்கு பிறகோ அல்லது நிறுமம் கலைக்கும்பொழுதோ பணத்தை திருப்பி செலுத்தும் தன்மை கொண்டது.

7. **மாற்றற்குரிய கடனீட்டுப் பத்திரங்கள்**

குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர், குறிப்பிட்ட விகிதத்தில் இவ்வகைக் கடனீட்டுப் பத்திரங்களைக் கொடுத்துவிட்டு நிறுமத்தின் நேர்மைப் பங்குகளாகவோ மாற்றுக் கொள்வது மாற்றற்குரிய கடனீட்டுப் பத்திரங்கள் ஆகும். மாற்றற்குரிய கடனீட்டுப் பத்திரங்கள் முழுவதும் மாற்றினால் அதனை "முழு மாற்றற்குரியவை" எனவும் ஒரு பகுதி மட்டும் மாற்றினால் அதனை "பகுதி மாற்றற்குரியவை" எனவும் அழைக்கப்படுகிறது.

8. **மாற்ற இயலா கடனீட்டுப் பத்திரங்கள்**

கடனீட்டுப்பத்திரங்களைக்கொடுத்துவிட்டு, மாறாக நேர்மை பங்குகளாக மாற்றிக் கொள்ளக் கூடிய உரிமை இல்லையெனில், அத்தகைய கடனீட்டுப் பத்திரங்கள் மாற்ற இயலா கடனீட்டுப் பத்திரங்கள் எனப்படும்.

### 6.4.3 கடனீட்டுப் பத்திரம் சரிபார்த்தலில் தணிக்கையாளர் கடமைகள்

தணிக்கையாளர் கடனீட்டுப் பத்திரங்களை சரிபார்க்கும்பொழுது, பின்வரும் செய்திகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

1. **கடன் பெறும் திறனை சரிபார்த்தல்**


அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளில் குறிப்பிட்ட கடன் பெறும் திறன் தொகைஅளவிற்குகடனீட்டுப்பத்திரங்களை வெளியிட்டு கடன் பெறப்பட்டுள்ளதா என்பதை தணிக்கையாளர் சரிபார்க்க வேண்டும்.

2. **கடனீட்டுப் பத்திர வெளியீட்டு நிபந்தனைகள் சரிபார்ப்பு**

கடனீட்டுப் பத்திரங்கள் வெளியீடு செய்வதற்கான நிபந்தனைகள் உள்ளனவா



Auditing_TAM_Chapter-06.indd 98 12/23/2019 1:39:17 PM




என்பதை தணிக்கையாளர் உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

3. **கடனீட்டு உறுதிப்பத்திரம் ஆராய்தல்**

   கடனீட்டுப் பத்திரம் பெற்ற கடனீட்டுப் பத்திதாரர்களின் கடன் தொகையும், கடனீட்டு உறுதிப்பத்திரம் உள்ள தொகையும் ஒன்றாக உள்ளதா என்பதை தணிக்கையாளர் ஆராய வேண்டும்.

4. **கடனீட்டுப் பத்திரம் மீட்பு**

   செயல்முறை விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு கடனீட்டுப் பத்திரங்களை மீட்பு நிதிக்காக பெறப்பட்டுள்ளதா என்பதை தணிக்கையாளர் ஆய்வு செய்ய வேண்டும்.

5. **முனைமம் (அல்லது) தள்ளுபடியில் வெளியிடல்**

   கடனீட்டுப் பத்திரங்களை முனைமத்தில் (அ) தள்ளுபடியில் வெளியிட்டுள்ளதை இருப்புநிலைக் குறிப்பில் உண்மையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை தணிக்கையாளர் சரிபார்க்க வேண்டும்.

6. **அடமான பதிவேடு மற்றும் கடனீட்டுப் பத்திரதாரர் பதிவேடு ஒப்பீடு செய்தல்**

   அடமான பதிவேடு மற்றும் கடனீட்டுப் பத்திரதாரர்கள் பதிவேட்டை ஒப்பிட்டு, அடமானத்திற்குரிய பதிவுகள் சரிவர பதியப்பட்டுள்ளதா என்பதை சரிபார்ப்பதுடன் இருப்பு நிலைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை தணிக்கையாளர் ஆய்வு செய்ய வேண்டும்.

## 6.5 நீண்டகால கடன்களை சரிபார்த்தல்

நிறுமங்கள் கடன் தொகையை அடமானம் பேரிலோ அல்லது பிணையற்ற அடமானம் பேரிலோ குறுகிய காலத்திற்கு அல்லது நீண்ட காலத்திற்கு பெறுகின்றன.



### தணிக்கையாளரின் கடமைகள்

கடன்களை சரிபார்க்கும்பொழுது தணிக்கையாளரின் கடமைகள் பின்வருமாறு

1. **கடன் உடன்படிக்கையை சரிபார்த்தல்**

   தணிக்கையாளர் கடன் உடன்படிக்கையையும், அதன் தொடர்பான கடித தொடர்புகளையும் சரிபார்க்க வேண்டும்.

2. **கடனுக்கான அவசியத்தை அறிதல்**

   கடனுக்கான அவசியத்தை ஆராயுவதுடன் அந்த குறிப்பிட்ட தேவைகளுக்காக கடன் தொகை பயன்படுத்தப்பட்டதா என்பதை தணிக்கையாளர் உறுதி செய்ய வேண்டும்.

3. **கடன் பெறும் திறனை ஆராய்தல்**

   அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளின்படி நிறுமத்தின் கடன் வாங்கும் திறன் உள்ளதா என்பதை தணிக்கையாளர் ஆராய வேண்டும்.

4. **இருப்புநிலைக் குறிப்பில் வெளிப்படுத்துதல்**

   இருப்புநிலைக் குறிப்பில் அடமான கடனும், பிணையற்ற கடனும் தனியாக காட்டப்பட்டுள்ளதா என்றும், இந்த கடனுக்கான செலுத்தப்படாத வட்டி நிலுவை நடப்பு பொறுப்பாக காட்டப்பட்டுள்ளதா என்றும் தணிக்கையாளர் சரிபார்க்க வேண்டும்.

5. **உறுதிபாட்டு கடிதம் பெறுதல்**

   கடன் கொடுத்தவரிடமிருந்து தணிக்கையாளர் உறுதிபாட்டு கடிதத்தை பெற்று, கடன் இருப்பு தொகை கணக்கேடுகளுடன் ஒப்பீட்டு ஆராய வேண்டும்.

## 6.6 நடப்பு பொறுப்புகளை சரிபார்த்தல்




நடப்பு பொறுப்புகள் என்பது ஒரு ஆண்டிற்குள் செலுத்த வேண்டிய பொறுப்புகளாகும். வங்கி மேல்வரைபற்று, பற்பல கடனீந்தோர், செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு மற்றும் கொடுபட வேண்டிய செலவுகள் ஆகியவைகளை உள்ளடக்கியது.

### 6.6.1 பற்பல கடனீந்தோர் – பொருள்

எந்தவொரு பயனும் அடையாமல் எவரொருவர் நிறுவனத்திற்கு பணமோ, பண மதிப்போ கொடுக்கிறாரோ அவர் கடனீந்தோர் ஆவார். பற்பல கடனீந்தோர் இருப்புநிலை குறிப்பில் நடப்பு பொறுப்பாக காட்டப்படுகிறது.

### தணிக்கையாளரின் கடமைகள்

1. *முதன்மை பதிவேடுகள் சரிபார்ப்பு*

   கொள்முதல் பேரேட்டில் எடுத்தெழுதப்பட்டதை முதன்மை பதிவேடுகளோடு சரிபார்க்க வேண்டும்.



Auditing_TAM_Chapter-06.indd 100 12/23/2019 1:39:24 PM

ஒரு ஆண்டின் குறிப்பிட்ட காலத்திற்குகூட எடுத்தெழுதல் சரிபார்க்கப்படலாம்.

2. **கணக்கு அறிக்கை சரிபார்ப்பு**

   கடனீந்தோர் கணக்கின் வரவு இருப்பை கடனீந்தோர் கணக்கு அறிக்கையோடு சரிபார்க்க வேண்டும்.

3. **வரவு பதிவுகள் சரிபார்த்தல்**

   கடனீந்தோர் கணக்கின் வரவு பதிவுகளான தள்ளுபடி, திருப்பம், கழிவு ஆகியவற்றை கடனீந்தோரின் கணக்கு அறிக்கையோடு ஒப்பிட்டு சரிபார்க்க வேண்டும்.

4. **கொள்முதல் திருப்பத்திற்கான கணக்குப் பதிவுகள்**

   வெளித் திருப்ப ஏட்டை பேரேட்டு கணக்கோடு ஒப்பிட்டு செய்தும் அனைத்து கொள்முதல் திருப்பங்களும் பற்று குறிப்புடன் ஒத்துள்ளனவா என்பதை சரிபார்க்க வேண்டும்.

5. **அடுத்த ஆண்டிற்கான கொள்முதல்கள்**

   ஆண்டு இறுதிக்கு பிற்பட்ட காலத்திற்கான கொள்முதல் இடாப்புகள் சரிபார்க்கப்பட்டு, கொள்முதல் தொகை நடப்பு தணிக்கை காலத்தில் சேர்க்கப்படாததை உறுதி செய்ய வேண்டும்.

6. **கொடுபட வேண்டிய இருப்புகளுக்கான காரணங்களை பெறுதல்**

   நீண்ட காலமாக கொடுபடாமல் உள்ள இருப்புகளை ஆராய்ந்து அவற்றிற்கான காரணங்களை கண்டறிய வேண்டும்.

7. **மொத்த இலாபம் ஒப்பீடு செய்தல்**

   தணிக்கை கால மொத்த இலாப சதவீதத்தை, அதற்கு முந்தைய ஆண்டு மொத்த இலாப சதவீதத்தோடு ஒப்பீடு செய்ய வேண்டும். நியாயமற்ற வேறுபாடு இருப்பின் கொள்முதலில் விடுபடுதல் அல்லது போலியான கொள்முதல்கள் கணக்கில் எழுதப்பட்டதா என்று ஆராய வேண்டும்.

8. **நிர்வாகத்திடமிருந்து ஒப்புதல்**

   கணக்காண்டு இறுதியில் நிலுவையில் உள்ள அனைத்து பொறுப்புகளும் கணக்கில் காட்டப்பட்டுள்ளது என்பதற்கான சான்றிதழை நிர்வாகத்திடமிருந்து தணிக்கையாளர் பெற வேண்டும்.

### 6.6.2 செலுத்துதற்குரிய மாற்றுச் சீட்டு

சீட்டுகள் என்பது மாற்றுச் சீட்டைக் குறிக்கும். கடன் கொள்முதலுக்குகாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சீட்டுகளை செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுகள் எனப்படுகிறது. மாற்றுச் சீட்டிற்குரிய தொகை தவணை நாளுக்குள் செலுத்தப்பட வேண்டும். இது ஒரு நடப்பு பொறுப்பு ஆகும்.

**தணிக்கையாளர் கடமைகள்**

1. **செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு பட்டியல்**


   தணிக்கையாளர் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு பட்டியலுடன் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு மற்றும் கணக்குகளை ஒப்பிட வேண்டும்.

2. **செலுத்தப்படாத மாற்றுச் சீட்டை சரிபார்த்தல்**

   தணிக்கையாளர் செலுத்தப்படாத மாற்றுச் சீட்டுகளை சரிபார்க்கும்பொழுது, ரொக்க ஏட்டில் செலுத்தப்பட்ட தொகையை சரிபார்க்க வேண்டும்.

3. **செலுத்துகை சான்று**

   தணிக்கையாளர் செலுத்தப்பட வேண்டிய மாற்றுச் சீட்டிற்குரிய செலுத்துதல்களை சான்றாய்வு செய்ய வேண்டும்.







Auditing_TAM_Chapter-06.indd 101 12/23/2019 1:39:24 PM

4. ரொக்கம் மற்றும் வங்கி அறிக்கை ஆராய்தல்

தணிக்கை தேதிக்கு முந்தைய, ஆனால் இருப்பு நிலை குறிப்பு தயாரித்த தேதிக்கு பிந்தய காலத்தில் செலுத்தப்பட்ட மாற்றுச் சீட்டுகளை ரொக்கம் மற்றும் வங்கி அறிக்கையோடு தணிக்கையாளர் ஒப்பிட்டு ஆராய வேண்டும்.

## 6.6.3 வங்கி மேல்வரை பற்று

### பொருள்

வங்கி கணக்கு வைத்திருப்பவர், தன் வங்கி கணக்கில் உள்ள தொகையை காட்டிலும் கூடுதலாக ஒரு குறிப்பிட்ட அளவிற்கு பணம் எடுக்கும் வசதி வங்கி வழங்கும் கடன் வசதியே வங்கி மேல்வரை பற்று ஆகும். இது ஒரு வியாபார அமைப்பிற்கு நடப்பு பொறுப்புகள் ஆகும். அதாவது, கணக்கு வைத்திருப்பவர், இத்தொகையை வங்கிக்கு திருப்பி செலுத்த வேண்டிய கடன் தொகை ஆகும்.

### தணிக்கையாளர் கடமைகள்

1. ***கடன்பெறும் திறனை சரிபார்த்தல்***

அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளின்படி நிறுமத்தின் கடன் வாங்கும் திறன் உள்ளதா என்பதை தணிக்கையாளர் ஆராய வேண்டும்.

2. ***ஒப்பந்த விவரங்களை சரிபார்த்தல்***


தணிக்கையாளர் கடன் ஒப்பந்தம், அதன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், வட்டி வீதம், பிணையத்தின் இயல்பு, அடமானத்தின் வகை போன்றவற்றை சரிபார்க்க வேண்டும்.

3. ***இயக்குநர்களின் முறையான அங்கீகாரம்***

தணிக்கையாளர், இயக்குநர்களின் நிகழ்ச்சி குறிப்பை பின்பற்றி வங்கி மேல்வரை பற்றுக்கு முறையான அங்கீகாரம் வழங்கப்பட்டதா என்பதை ஆராய வேண்டும்.

4. ***வங்கி மேல்வரை பற்று இருப்பை உறுதிபடுத்தல்***

தணிக்கையாளர், வங்கி மேல்வரை பற்று இருப்பை அந்த ஆண்டு இறுதியில் வங்கியிடம் உறுதிபடுத்த வேண்டும்.




## 6.6.4 கொடுபட வேண்டிய செலவுகள்

### பொருள்

நடப்பு ஆண்டில் செலவுகளினால் கிட்டும் பயன் அனுபவிக்கப்பட்டு இருந்து, அச்செலவுகள் அந்த ஆண்டு இறுதிக்குள் செலுத்தப்படாமல் இருப்பதை ஆண்டு இறுதிக் கணக்குகளில் பதியப்படுவது கொடுபட வேண்டிய செலவுகள் ஆகும்.

### தணிக்கையாளரின் கடமைகள்

1. ***கொடுபட வேண்டிய செலவினங்களின் பட்டியலை சரிபார்த்தல்***

செலவுகளின் தன்மையின்படி, வாடிக்கையாளரிடமிருந்து பொறுப்பான அலுவலரால் சான்றளிக்கப்பட்ட கொடுபட வேண்டிய செலவினங்களின் பட்டியலை தணிக்கையாளர் கேட்க வேண்டும்.



Auditing_TAM_Chapter-06.indd 102 12/23/2019 1:39:25 PM

2. ரொக்கப் புத்தகம் சரிபார்த்தல்

அடுத்த ஆண்டு ரொக்கப் புத்தகத்தை, தணிக்கை நேரத்தில் பணம் செலுத்தியுள்ளனர் என்பதை தணிக்கையாளர் உறுதிப்படுத்த வேண்டும்.

3. முந்தைய ஆண்டுடன் செலவினங்களை ஒப்பீடு செய்தல்

நடப்பு ஆண்டின் கொடுபட வேண்டிய செலவினங்களின் பட்டியலை, முந்தைய ஆண்டின் கொடுபட வேண்டிய செலவினங்களின் பட்டியலுடன் தணிக்கையாளர் ஒப்பிடு செய்ய வேண்டும்.

4. ஒதுக்கு உருவாக்கப்பட்டதா என்பதை சரிபார்த்தல்

தேவையான இரசீதுகள் மற்றும் சான்றுச் சீட்டுகளைப் பரிசோதிப்பதன் மூலம் அனைத்து கொடுபட வேண்டிய செலவுகளுக்கும் ஒதுக்கு தேவைப்படும் என்பதை தணிக்கையாளர் சரிபார்க்க வேண்டும்.




## 6.7 நிகழ்வடையாப் பொறுப்புகள் சரிபார்த்தல்

### 6.7.1 பொருள்

எதிர்காலத்தில் நிகழலாம் அல்லது நிகழாது போகலாம் என்று கருதக்கூடிய







பொறுப்புகளே நிகழ்வடையாப் பொறுப்புகள் எனப்படும். தணிக்கையாளர் அனைத்து அறியப்பட்ட மற்றும் தெரியாத பொறுப்புகள் உறுதி செய்ய வேண்டும். இது இருப்பு நிலைக்குறிப்பில் காட்டப்படும்.

நிகழ்வடையாப் பொறுப்புகளுக்கு கீழ்க்கண்டவைகள் எடுத்துக் காட்டுகளாகும்.

1. தவணை முதிர்வு அடையாமல் தள்ளுபடி செய்து பணம் பெறப்பட்ட பெறுததற்குரிய மாற்றுச் சீட்டுகள்.
2. பகுதிப் பணம் செலுத்தப்பட்ட பங்குகளுக்கான அழைப்பு.
3. குவிவு முன்னுரிமைப் பங்குகள் மீதான கடந்த காலக் கொடுபடா பங்காதாயம்.
4. உத்தரவாத ஒப்பந்தத்தின் மீதான பொறுப்பு.
5. முற்றுப் பெறாத ஒப்பந்தங்களின் மீதான பொறுப்பு.
6. நிறுவனத்திற்கெதிராக நட்ட ஈடு கோரி தொடுக்கப்பட்டிருக்கும் வழக்குகள், வணிகக் குறிகள், பதிப்புரிமை முதலியன.



Auditing_TAM_Chapter-06.indd 103 12/23/2019 1:39:27 PM


## 6.7.2 நிகழ்வடையாப் பொறுப்புகளை சரிபார்ப்பதில், தணிக்கையாளர் கடமைகள்

1. போதுமான ஏற்பாட்டை உருவாக்கும் உறுதி


   தணிக்கையாளர் சில பொறுப்புகளுக்கு சரியான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும். உதாரணமாக வழக்குகளின் காரணமாக எழும் பொறுப்புகளுக்கு அவருக்கு திருப்தி இல்லை என்றால், உண்மையில் அறிக்கையில் கூறப்பட வேண்டும்.

2. இருப்புநிலைக் குறிப்பில் வெளிப்படுத்தல்

   நிகழ்வடையாப் பொறுப்புகளை பற்றி, இருப்புநிலை புத்தகங்களில் எந்தவொரு ஏற்பாட்டையும் செய்யாதது. உதாரணமாக தள்ளுபடி செய்யப்படும் பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள், திரட்டப்பட்ட நிலையான பங்காதாயம் போன்றவற்றின் நிலுவைத் தொகை, தணிக்கையாளர் அத்தகைய பொறுப்புகள் இருப்புநிலைக் குறிப்பில் வெளிப்படுத்தப்படுவதை சரிபார்க்க வேண்டும்.




### மாணவர்களின் செயல்பாடு



1. நீண்ட கால பொறுப்பு, குறுகிய கால பொறுப்பு மற்றும் ஒரு தொழிலின் தற்போதைய பொறுப்பு ஆகியவற்றைப் பற்றி விவாதிக்கவும்.
2. உங்கள் நிறுவனத்தில் எதிர்பாராத செலவினங்களை சந்திக்க செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பற்றி விவாதிக்கவும்.

## பாடச்சுருக்கம்

- பொறுப்புகள் சரிபார்க்கப்படும்போது, தணிக்கையாளர் பின்வருவனவற்றை கவனித்தில் கொள்ள வேண்டும்.
  1. முறையான பதிவுகள் பராமரிக்கப்படுகிறது
  2. பொறுப்புகள் உண்மையான செலுத்த்தக்கவை மற்றும் ஒழுங்காக இருப்புநிலைக் குறிப்பில் வெளிப்படுத்தப்படுத்தப்படுகிறது.
- தணிக்கையாளர் பங்கு மூலதனத்தை பின்வரும் குறிப்புடன் சரிபார்க்க வேண்டும். அமைப்பு முறையேடு, உறுப்பினர் பதிவேடு, ரொக்கம் மற்றும் வங்கி அறிக்கையில் சான்றுகளின்படி பதிவுகள், தோற்றுவிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களின் செய்யும் ஒப்பந்தங்கள், இருப்புநிலைக் குறிப்பில் முறையாக வெளிப்படுத்துதல் மற்றும் நிறுமச் சட்டத்தின் விதிமுறைகள் இணைத்தல்.
- தணிக்கையாளர் பின்வருவனவற்றின் மூலம் காப்புகள் மற்றும் உபரிகள் சரிபார்க்க வேண்டும். காப்புகள் உருவாக்குதல், காப்புகளை பயன்படுத்துதல், இருப்பு நிலைக் குறிப்பில் வெளிப்படுத்தல், முனைமம் விகிதத்தை உறுதிப்படுத்துதல், தகவலறிக்கை, செயல்முறை விதிகள், இயக்குநரவை நிகழ்ச்சி குறிப்பு, முனைமம் பரிமாற்றத்தை பத்திர முனைமம் கணக்கில் மாற்றுதல்.
- கடனீட்டுப் பத்திரம் சரிபார்த்தல் – நிறுவனத்தின் கடன் பெறும் திறன், வெளியீட்டு நிபந்தனைகள், கடனீட்டுப் பத்திரங்களின் அறக்கொடைஆவணம், செயல்முறை விதிகளுடன் மீள்தகு கடனீட்டுப் பத்திரம் சரிபார்த்தல்
- கடனீந்தோர் தொகையினை சரிபார்த்தல் – கடன் வழங்குபவர்களின் சான்று பதிவுகளின் பட்டியல், உள்திருப்ப பதிவேடு சரிபார்ப்பு, தள்ளுபடிகளை சரிபார்த்தல், கடன் கொள்முதல் ஒப்பந்தம் சரிபார்த்தல், வட்டி வீதம் ஒப்பிடல், பதிவு செய்யப்பட்ட கடனீட்டுப் பத்திரதாரர்கள் பதிவேடு வைத்தல்.
- கொடுபட வேண்டிய செலவுகள் சரிபார்த்தல் – கொடுபட வேண்டிய செலவினங்களின் பட்டியலை சரிபார்த்தல், செலவுகளுக்கு ஒதுக்கீடு, முந்தைய ஆண்டு இருப்புகளை ஒப்பீடு செய்தல் மற்றும் செலவினங்களுக்கு தொடர்ந்து செலுத்துதல்.
- நிகழ்வடைவான பொறுப்புகள் சரிபார்த்தல் – எதிர்காலத்தில் நிகழலாம் அல்லது நிகழாது போகலாம் என்று கருதக்கூடிய பொறுப்புகள் நிகழ்வடைவான பொறுப்புகளாகும். தணிக்கையாளர் அனைத்து அறியப்பட்ட மற்றும் தெரியாத பொறுப்புகள் உறுதி செய்ய வேண்டும். இது இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்படும்.

## கலைச்சொற்கள்

- **பங்குகள்:** இது ஒரு பங்கு முதலில் ஒரு பகுதி ஆகும்.
- **கடனீட்டுப் பத்திரங்கள்:** இது ஒரு நிறுமத்தால் வெளியிடும் கடன் பத்திரம் ஆகும்.
- **பங்கு முதல்:** நிறுமத்தில் பங்குகளை வெளியிட்டு அதன் மூலம் முதல் ஈட்டுவது பங்கு முதல் ஆகும்.



Auditing_TAM_Chapter-06.indd 105 12/23/2019 1:39:28 PM

- **கொணர்வோர் கடனீட்டுப் பத்திரம்:** கொணர்பவர் கடனீட்டுப் பத்திரங்கள் ஒரு பதிவு செய்யப்படாத, பாதுகாப்பற்ற பத்திரமாகும். நிறுமத்தின் கடன் பத்திரங்கள் வைத்திருப்பவர்களின் முழு விவரங்கள் கடனீட்டுப் பத்திர பதிவேட்டில் இடம் பெறுவதில்லை.
- **பிணைக் கடனீட்டு பத்திரங்கள் அல்லது அடமானக் கடனீட்டுப் பத்திரங்கள்:** நிறுமத்தின் நிலைச் சொத்துகளை அடமானமாக்கி அவற்றின் மீது பிணையாகப் பொறுப்பு ஏற்படுத்து வழங்கப்படும் கடனீட்டுப் பத்திரங்கள் பிணைக் கடனீட்டுப் பத்திரங்கள் ஆகும்.
- **பிணையற்ற அல்லது வெற்றுக் கடனீட்டுப் பத்திரங்கள்:** நிறுமம் தன் நிலைச் சொத்துகளை ஈடாகக் காட்டாமல், அவற்றைப் பிணையாக ஏற்படுத்தாமல் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்கள் பிணையற்ற கடனீட்டுப் பத்திரங்கள் ஆகும்.
- **நிகழ்வடையாப் பொறுப்புகள்:** எதிர்காலத்தில் நிகழலாம் அல்லது நிகழாது போகலாம் என்று கருதக்கூடிய பொறுப்புகள் நிகழ்வடையாப் பொறுப்புகள் ஆகும்.

## மதிப்பீடு

3RQWJ7

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. எதிர்காலத்தில் நிகழலாம் அல்லது நிகழாது போகலாம் என கருதப்படும் பொறுப்புகளுக்கு செலுத்துவது ________________.
   - அ) குறிப்பிட்ட பொறுப்பு
   - ஆ) நிகழ்வடைவான பொறுப்புகள்
   - இ) செலவுகள்
   - ஈ) வருமானங்கள்
2. கூட்டாண்மையின் முதல் சரிபார்க்கும்பொழுது, சரிபார்க்கும் முக்கியமான ஆவணம் ________________.
   - அ) அமைப்பு முறையேடு
   - ஆ) கூட்டாண்மை ஒப்பாவணம்
   - இ) இரண்டும் சரி
   - ஈ) இதில் எதுவும் இல்லை
3. கூட்டுப் பங்கு நிறுமத்தில் பங்குமுதல் சரிபார்க்கும் பொழுது, சரிபார்க்கும் முக்கியமான ஆவணம் ________________.
   - அ) அமைப்பு முறையேடு
   - ஆ) கூட்டாண்மை ஒப்பாவணம்
   - இ) இரண்டும் சரி
   - ஈ) இதில் எதுவும் இல்லை
4. ________________ என்பது பொறுப்புகள் ஒழுங்காக மதிப்பிடப்படுகிறதா என்பதை அறிய தணிக்கையாளரால் செய்யப்பட் சரிபார்ப்பு குறிக்கிறது.
   - அ) மதிப்பிடுதல்
   - ஆ) மதிப்பீடு
   - இ) கணக்கிடுதல்
   - ஈ) இதில் எதுவும் இல்லை

5. கடனீந்தோர்கள் மற்றும் வங்கி மேல்வரைப் பற்று ஆகியவை __________
   அ) நடப்புச் சொத்துகள்
   ஆ) நிலைச் சொத்துகள்
   இ) நடப்புப் பொறுப்புகள்
   ஈ) நிலையான பொறுப்புகள்

6. இருப்பு நிலைக் குறிப்பின் ________________ பக்கத்தில், கொடுபட வேண்டிய கூலி, சம்பளம், வாடகை, வரி, வட்டி போன்றவை காட்டப்படும்.
   அ) சொத்துக்கள்
   ஆ) பொறுப்புகள்
   இ) இரண்டும் சரி
   ஈ) இதில் எதுவும் இல்லை

7. ஒப்பிய முதலுக்கும் அழைக்கப்பட்ட முதலுக்கும் இடையே உள்ள வேறுபாடு அழைக்கப்படுவது ________________
   அ) அழைக்கப்படாத முதல்
   ஆ) அழைப்பு முன்பணம்
   இ) செலுத்தப்பட்ட முதல்
   ஈ) காப்பு முதல்

8. நிறுமத்தின் முதலின இலாபத்திலிருந்து உருவாக்குவது ________________
   அ) முதலின காப்பு
   ஆ) காப்பு முதல்
   இ) ஒப்பிய முதல்
   ஈ) அழைப்பு முன்பணம்

9. நிறுமம் கடன் பெற்றதற்கு ஒப்புக் கொள்ளும் ஆவணம் ________________
   அ) பங்குகள்
   ஆ) கடனீட்டுப் பத்திரம்
   இ) பத்திரங்கள்
   ஈ) நிலை வைப்புகள்

10. குறிப்பிட்ட காலத்திற்கு பின் கடனீட்டுப் பத்திரங்களை நிறுமம் மீட்டுக் கொள்ளக் கூடியது ________________.
   அ) மீள்தகு கடனீட்டுப் பத்திரங்கள்
   ஆ) மீள்தகா கடனீட்டுப் பத்திரங்கள்
   இ) மாற்றற்குரிய கடனீட்டுப் பத்திரங்கள்
   ஈ) பிணைக் கடனீட்டுப் பத்திரங்கள்

**விடைகள் 1. (ஆ), 2. (ஆ) 3. (அ), 4. (அ) 5. (இ) 6. (ஆ) 7. (அ) 8. (அ) 9. (ஆ) 10. (அ)**

## II. குறு வினாக்கள்

1. பொறுப்புகளை சரிபார்த்தலின் பொருள் யாது?
2. பங்குகள் என்றால் என்ன?
3. கடனீட்டுப் பத்திரம் என்றால் என்ன?
4. அழைப்பு நிலுவை என்றால் என்ன?
5. வங்கி மேல்வரை பற்று என்றால் என்ன?

## III. சிறு வினாக்கள்

1. பங்கு முதல் பொருள் யாது?
2. நிகழ்வடையாப் பொறுப்புகள் என்றால் என்ன?
3. அங்கீகரிக்கப்பட்ட முதல் பற்றி நீ அறிந்து கொள்வது யாது?
4. காப்பு முதல் என்றால் என்ன?
5. கடனீட்டுப் பத்திரங்களின் வகைகள் யாவை?

**IV. கட்டுரை வினாக்கள்**

1. பங்கு முதலின் வகைகளை விளக்குக.
2. பங்கு முதல் சரிபார்ப்பதில் தணிக்கையாளரின் கடமைகளை விளக்குக.
3. காப்பு முதல் சரிபார்ப்பதில் தணிக்கையாளரின் கடமைகள் விளக்குக.
4. நிகழ்வடையாப் பொறுப்புகளை சரிபார்ப்பதலில் தணிக்கையாளரின் கடமைகள் விளக்குக.
5. ஒரு தணிக்கையாளராக, வியாபார அக்கறையால் பெறப்பட்ட கடன்களை நீங்கள் எவ்வாறு சரிபார்க்க வேண்டும்?


### மேற்கோள் நூல்கள்

1. Practical Auditing – B.N. Tandon and Others, S.Chand Publication.
2. Principles and Practice of Auditing – Dinkar Pagare, Sultan Chand & Son's.
3. Practical Auditing – Dr.G.Anitha & Dr.J.Sankari, Sri Selva Publishers Distributors.
4. Practical Auditing – Dr. L. Natarajan, Margham Publications, Chennai.
5. Auditing – Study Material, The Institute of Cost Accountants of India.
6. தணிக்கையியல் செய்முறை - தமிழ்நாடு பாடநூல் கழகம் பதிப்பு - 2006.